**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**MCOP. 55/2024**

நாள் 17.04.2025

**ம.சா.1. – 1 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

விபத்தில் இறந்துபோன நபர் எனக்கு என்ன உறவு முறை என்றால் எனது கணவர். எனது கணவர் இறந்தது குறித்து காவல் நிலையத்தில் யார் புகார் கொடுத்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. எனது கணவர் விபத்தில் அடிபட்டது குறித்தும், மருத்துவமனையில் சேர்க்கப்பட்டது குறித்தும் எனக்கு தெரியாது. எனது கணவர் எப்போது எனது வீட்டிலிருந்து வெளியே சென்றார் என எனக்கு தெரியாது. எனது கணவரின் வயது மற்றும் வருமானம் குறித்து ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது கணவர் மனநலம் பாதிக்கப்பட்டவர் என்றும், அவர் தன்னிச்சையாக சாலையில் கடந்து சென்று விபத்து ஏற்படுத்திக் கொண்டார் என்று சொன்னால் சரியல்ல. 1–ம் எதிர்மனுதாரரை பொறுத்து நான் இழப்பீடு பெற முடியாது என்று சொன்னால் சரியல்ல. 1–ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்று சொன்னால் சரியல்ல. 1–ம் எதிர்மனுதாரரின் வாகனம் 2–ம் எதிர்மனுதாரர் கம்பெனியில் காப்பீடு செய்துள்ளதால் 1–ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல.

**2–ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.